1995 ஏப்ரல் 21]

பகுதிகளுக்கு பெண் ஆசிரியர்களை நியமிப்பதில் முன் உரிமையைக் கொடுத்து அமைச்சர் அவர்கள் நியமிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1 முதல் 5 வகுப்புகள் வரை நியமிக்கப்படும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பெண்களாகவே இருக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட முடிவை எடுத்தது இல்லை. தமிழகத்திலே தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஆணையிட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களை நியமிக்கும்போது கூடிய விரைவில் பெண் ஆசிரியர்கள் அந்தந்த இடங்களுக்கு, அந்தந்த பகுதியைச் சார்ந்தவர்களாகத்தான் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 396, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

396.—

தோகைமலை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

**35693—திரு. அ. பாப்பா சுந்தரம்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியத்தில், தோகைமலை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக இந்த ஆண்டில் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோகைமலை என்பது ஒரு தனி ஒன்றியம். கிட்டத் தட்ட

60 ஆயிரம் மக்களைக் கொண்ட ஒன்றியம், அத்தோடு தோகைமலை ஒரு வறட்சியான பகுதியாகும். தோகைமலையிலே ஒரு உயர்நிலைப் பள்ளிதான் இருக்கிறது. அதை மேல்நிலைப்பள்ளியாக்க வேண்டும் என்று 3, 4 ஆண்டுகளுக்கு முன்பே பணத்தைக் கட்டி, அதற்குரிய ஆவணங்களையும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியிலே 15 கிலோ மிட்டர் சுற்றளவிலே வேறு மேல் நிலைப் பள்ளியும் இல்லாததால், அதை அரசு இந்த ஆண்டு பரிசீலனை செய்து இந்த மேல்நிலைப் பள்ளியை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா, அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மேம்படுத்தப்பட்ட பள்ளிகளின் வரிசையில் இந்தப் பள்ளி இடம் பெறவில்லை. இந்தக் கல்வி ஆண்டிற்கும் அது மேம்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. விதிமுறைகளின் அடிப்படையில் உயர்நிலைக் குழு அதைப் பரிசீலித்து பரிந்துரை செய்யும். அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் அரசு தொடர் நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன கருத்து என்னவென்றால் அந்த ஒன்றியத்தில் வேறு பள்ளி எதுவும் இல்லாததால், பணத்தையும் கட்டி, அதற்கு வேண்டிய ஆவணங்களையும் 4 ஆண்டுகளுக்கு முன்பே கொடுத்திருக்கிறபடியால் அந்தப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்து தர வேண்டும் எனறு அன்போடு வேண்டுகோள் விடுத்து, செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அதற்கென அமைக்கப்பட்டிருக்கிற உயர்நிலைக் குழு பரிசீலிக்கும்போது இந்தப் பள்ளியும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 397, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண். 398, திரு. து. மூர்த்தி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.